பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 24 (8—8—72) செவ்வாய் வெளியூர்: ஆடி 25 (9—8—72) புதன் [இதழ்: 47

## 'முகத்திரண்டு புண்ணுடையோர்' தொகை!

'அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 38 கோடி 60 இலட்சம் பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

எழுத்தறிவுள்ளவர்களின் எண்ணிக்கை 1951-ல் 16 60 சதவிகிதமாக இருந்தது; 1861-ல் இது 29.30 சதவிகிதமாக உயர்ந்தது; ஆயினும், இருபது ஆண்டுகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்திராவிடம் தவறான தகவல்கள்

## இரண்டாம் தரத்தில் உள்ளவர்களின் விஷமத்தனம்

### தமிழ்நாடு எந்த வகையில் மோசமாகிவிட்டது?

### முதல்வர் கலைஞர் விளு--செய்தியாளரிடம் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக 8—

"தமிழகத்தில் நடைபெறும் தி.மு. கழக ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம்--என்று பேசிய மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், அதே நேரத்தில் 'நிலைமை மோசமானால் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தலையிட முடியும்' என்று இப்போதும் பேசுகிறார்; என்ன நிலைமை மோசம் என்பதை சுப்பிரமணியம் சொல்ல வேண்டாமா? தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அதுபோன்ற ஓர் எண்ணத்தை உருவாக்குவதற்கு அவருக்கு (இந்திரா காந்திக்கு) அடுத்த மட்டத்தில் இருக்கின்ற சிலர் கவிழ்ப்பதற்குத் தேவையான பிரசாரங்களைச் செய்வதுடன், இந்திரா காந்தியிடம், தமிழ்நாட்டில் ஏதோ சட்டம்--ஒழுங்கு--அமைதி இல்லாதது போன்ற ஒரு அடிப்படையற்ற செய்தியை அடிக்கடி சொல்லிவருகிறார்கள்.

"அவர்கள் அப்படித் தலைமையமைச்சரிடம் தொடர்ந்து இதே வேலையை (பொய்ப் பிரசாரம்) செய்து வருகிறார்கள் என்பதை, தலைமையமைச்சரும்--நானும் சந்திக்கும் போது, தலைமையமைச்சரின் பேச்சிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடிகிறது; ஒவ்வொரு முறையும் நான் அதற்கான உண்மை நிலை விளக்கங்களைத் தலைமையமைச்சருக்கு அளித்திருக்கிறேன்"

**என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; உடல் நலம் பற்றி விசாரித்த செய்தியாளர்களிடம், மதுரை மாநாட்டில் உடல் நலக் குறைவு ஏற்பட்டதற்கான சூழ்நிலை குறித்தும் விளக்கினார்; பின்னர், தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல்வர் பதில் அளித்தார்; கேள்விகளும்--பதில்களும் வருமாறு:—**

### உடல்நலம் பற்றி முதலமைச்சர்

"இப்போது உடம்புக்கு அசதி ஒன்றும் இல்லை; உடம்பில் சிறிது வலி இருக்கிறது -- அவ்வளவுதான்; கொஞ்சம் வேலைகளைக் குறைத்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டால், சரியாகிவிடும்."

### அமைச்சரவையில்...

கேள்வி:—"அமைச்சரவையில் மாற்றம் ஏதும் உண்டா? அல்லது இலாகா மாற்றம் ஏதும் உண்டா?"

முதல்வர்:— "அமைச்சரவை மாற்றம் இல்லை; இலாகா மாற்றம்தான்; அப்படி ஏதும் இருந்தாலும், சட்டமன்றக் கூட்டத்திற்குப் பிறகுதான் நடைபெறும்."

### மாற்றுக் கட்சியினரின் கூற்றின் எதிரொலி

கேள்வி:—"நீங்கள் இரண்டு நாட்களுக்குமுன் மதுரையில் பேசும்போது, 'தி. மு. கழக அமைச்சரவையைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் இந்திரா அம்மையாருக்கு இல்லை' என்று சொன்னீர்கள்; ஆனால் மாநாட்டில் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள், 'தமிழக அமைச்சரவையை மத்திய அரசு கவிழ்க்கப்போகிறது' என்ற தோரணையிலேயே பேசினார்களே -- அப்படியானால், மத்திய அரசுக்கும் – தி. மு. கழக அரசுக்கும் இடையே மோதல் ஏற்படும் என்ற எண்ணம் உண்டா?"

முதல்வர்:—"அப்படி ஒன்றும் இல்லை; மோதல் பற்றி யாரும் பேசவில்லை; ஆனால், மோதல் வருகின்ற மாதிரி பேசிக்கொண்டிருக்கின்ற மாற்றுக் கட்சிக்காரர்களைக் கண்டித்துத்தான் பேசினார்கள்."

### உணர்ச்சிவயத்துடன் பணியாற்ற கோரிக்கை

கேள்வி:—"ஆறு மாதத்திற்குள் தேர்தல் வருமென்று உங்கள் கட்சியினருக்கு இந்திரா காந்தி கூறியிருப்பதாக முரசொலி மாறன், மதுரை மாநாட்டில் பேசினாரே?"

முதல்வர்:— 'அப்படி ஆறு மாதத்திற்குள் தேர்தல் வந்தால், எப்படி உணர்ச்சிவயத்தோடு வேலை செய்ய வேண்டுமென்றுதான் மாறன் கழகத்தினரைக் கேட்டுக்கொண்டார்."

### ஆளுநர் பிரச்சினையும் அரசியல் சட்டத் திருத்தமும்

கேள்வி:—"கவர்னரைத் தாக்கிப் பலர் பேசியிருக்கிறார்களே?"

முதல்வர்:—"மாநில சுயாட்சிக் கேட்பதிலும், அரசியல் சட்டத் திருத்தம் பற்றிக் கேட்பதிலும் கவர்னர் பதவி தேவையில்லாதது என்று தி. மு. கழகம் சொல்லிவருகிறது; அரசியல் சட்டம் அவ்வாறு திருத்தப்பட வேண்டுமென்பதையும் கேட்டு வருகிறது; நாங்கள் கேட்கின்ற கூட்டாட்சி முறையில், கவர்னர் பதவி தேவையில்லை என்று கருதுகிறோம்; ஆகவே, 'அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்' என்கிறோம்; அரசியல் சட்டத் திருத்தம் வருகின்ற வரையில், கவர்னர் பதவியில் அமர்ந்திருப்பவர்களை நாங்கள் மதிப்போம்."

### விவாதத்திற்குரியவராக ஆளுநர் ஆகக்கூடாதல்லவா?

கேள்வி:—"கவர்னர் மனு வாங்குகிறார் -- மனு வாங்குகிறார் என்று தாக்கிப் பேசியிருக்கிறார்களே?"

முதல்வர்:—"மனுவை வாங்கிய பிறகு கவர்னர், மனு கொடுத்தவர்களிடம் சொல்லியவைகளை திரித்தும்--மறைத்தும்--மிகைப்படுத்தியும்--அதிகமாகச் சொல்லியும் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுக்கிறார்கள்; இதனால், விவாதத்திற்கு உரியவராகக் கவர்னர் ஆகிவிடுகிறார் என்ற கவலையைத்தான் மாநாட்டுத் தலைவர் மாறன் குறிப்பிட்டார்."

### தவறான பிரச்சாரம் செய்வதன் விளைவு

கேள்வி:—"தி. மு. க. அமைச்சரவையை இந்திரா காந்திக்கு கவிழ்க்கும் எண்ணம் இல்லையென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; ஆனால் மற்றவர்கள் 'கவிழ்க்கக்கூடும்' என்று பேசி வருவதால், கவிழ்ப்பு பற்றிய பயம் ஏற்பட்டிருக்கிறதா? 'பசு சாதுவாகத்தான் இருக்கிறது; ஆனால், கன்றுகள்தான் துள்ளுகின்றன' என்று சொன்னீர்களே -- கன்றுகளை அடக்கப் பசுவிடம் சொல்லுவீர்களா?"

முதல்வர்:—"அந்தக் கன்றுக் குட்டிகளைப் பசு உதைக்காது; துள்ளுகின்ற கன்றுக்குட்டியைப் பசு என்றும் பிடித்துக் கட்டாது; ஆகவே, இருக்கின்றவர்கள்தான் பிடித்துக் கட்ட வேண்டும்; பொறுப்பில் இருக்கின்றவர்களே அதைப் பிடித்துக் கட்டவேண்டும்.

"அமைச்சரவை கவிழ்ப்பும் மற்றி தி. மு. கழக மேல்மட்டத் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரையில், யாருக்குமே அப்படிப்பட்ட பீதியோ – சந்தேகமோ இல்லை; ஆனால் தமிழ்நாட்டிலுள்ள தேசிய காங்கிரசார், அப்படிப்பட்டதோர் தவறான பிரச்சாரத்தைச் செய்துகொண்டு வருகிறார்கள்; அதற்குக் கழக மேடைகளில் பதிலளிக்கும்பொழுது, 'கவிழ்ப்பு' என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது; சி. சுப்பிரமணியம் கூட, தாம் பேசும்பொழுதெல்லாம், 'நாங்கள் ஒன்றும் கவிழ்க்க வேண்டியதில்லை; நிலைமை மோசமானால் இந்திரா காந்தியாரே தலையிட முடியும்' என்று கூறுகிறார்; அப்படி என்ன நிலைமை மோசமாகிவிட்டது?'

### ஆதாரமற்ற செய்தியை அடிக்கடி சொல்லுவதேன்?

கேள்வி:—"இந்திரா காந்தியிடம் அம்மாதிரி கவிழ்ப்பு எண்ணம் இருக்கிறதா?'

முதல்வர்:—"இந்திரா காந்தியிடம் அந்த எண்ணத்தை உருவாக்குவதற்கு அந்த அம்மையாருக்கு அடுத்த மட்டத்தில் இருக்கின்ற சிலர் கவிழ்ப்பதற்குத் தேவையான பிரசாரங்களைச் செய்வதோடு, அந்த அம்மையாரிடத்திலும், தமிழ்நாட்டில் ஏதோ சட்டம் -- ஒழுங்கு -- அமைதி கெட்டுவிட்டது போன்ற அடிப்படை ஆதாரமற்ற செய்தியை அடிக்கடி சொல்லி வருகிறார்கள்."

### நெஞ்சாரப் பொய் சொல்லுவோர் தவிர...

கேள்வி:— 'அப்படியானால், அவர்கள் சொல்லுவதை தலைமையமைச்சர் நம்புகிறாரா?"

முதல்வர்:— 'தலைமையமைச்சரிடம் திறமையான ஒற்றர் படை இருக்கிறது; மதுரையில் நடைபெற்ற மாநாட்டை அவர்கள் பார்த்திருப்பார்கள்; மக்கள் எழுச்சியைக் கண்டிருப்பார்கள்; நெஞ்சாரப் பொய்யே சொல்ல வேண்டுமென்று உறுதி எடுத்துக் கொண்டவர்கள் தவிர, மதுரை மாநாட்டின் எழுச்சி, 'தமிழ்நாடு தி. மு. கழகத்தின் பக்கம்தான் இருக்கிறது என்பதை விளக்கிவிட்டது' என்ற உண்மையைத் தலைமையமைச்சரிடம் சொல்லாமல் இருக்கமாட்டார்கள்."

கேள்வி:—"ஆனால் மேல் மட்டத்திலிருக்கின்ற எம்.ஜி.ஆர். கூட, மோதலுக்கு அறிகுறியாக இராணுவம் வரும் என்றெல்லாம் பேசியிருக்கிறாரே?"

முதல்வர்:—"அமைச்சரவையைக் கவிழ்த்தால் அப்படி வரும்--என்றுதான் பேசினார்."

## நியாய விலையில் நூல் கிடைக்குமா?

### கட்டுப்பாடு கொண்டு வருவது பற்றி மத்திய அமைச்சர்

புதுடில்லி, ஆக. 8—

'நூல் விநியோகம் நியாயமாக நடப்பதற்கு உற்பத்தியாளர்கள் அவர்களாகவே ஏற்பாடு செய்துகொண்டுள்ள ஒரு திட்டம் இம்மாதம் செயலுக்கு வந்துள்ளது; இது வெற்றி பெறவில்லையானால், நூல் உற்பத்தி -- விநியோகத்தின்மீது சட்டபூர்வமான கட்டுப்பாடு கொண்டுவர அரசு தயங்காது"

என்று, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"கைத்தறி நெசவாளர் யாரும் சிரமத்துக்குள்ளாக அரசு அனுமதிக்காது" என்று உறுதி கூறினார்.

"கைத்தறி தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க மத்திய அரசுகள் திட்டங்கள் வகுக்கவேண்டும்; அவர்கள் திட்டம் வகுத்தால் உதவி செய்ய மத்திய அரசு தயாராக இருக்கும்" என்று அவர் கூறினார்.

## நியாய விலையில் பண்டங்கள்

### புதிய ரேஷன் முறை செயலுக்கு வரும்?

நாட்டில் பரவலாகத் தோன்றியுள்ள வறட்சி நிலவரத்தைச் சமாளிக்கவும், பருப்பு வகைகள் -- உணவுக்கான எண்ணெய் வகைகள் -- பிற தானியங்கள் -- சர்க்கரை -- மண்ணெண்ணெய் போன்ற சில இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயர்ந்துள்ளதைச் சமாளிக்கவும் பொதுத் திட்டம் ஒன்றை மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.

விலைவாசி உயர்வுப் பிரச்சினை தொடர்பாக நியாய விலைக் கடைகளின் மூலம் அரசு இருப்புகளிலிருந்து உணவுத் தானியங்கள் அனைத்தையும் வழங்கும் திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாக தெரிகிறது.

பொது மக்களுக்குப் பரவலாகவும் -- நியாயமான முறையிலும் உணவுப் பொருள் வழங்குவதற்கு ஒருவித 'ரேஷன்' முறை வரலாம் என்றும் தெரிகிறது.

# கழகத்தை வீழ்த்தக் காமராசரால் இயலாது

## ஆட்சியில் ஏற்றிவைத்த மக்களுக்கே அந்த உரிமை உண்டு

### வீழ்த்த முனைந்தவர்களெல்லாம் வீழ்ந்த கதை தெரியாதா?

### மதுரை மாநாட்டில் பொதுச்செயலாளர் நாவலர் முழக்கம்

மதுரை, ஆக. 8

"கழக ஆட்சியை, யார் ஆட்சிப் பீடத்தில் ஏற்றிவைத்தார்களோ அவர்களால்தான் இந்த ஆட்சியை வீழ்த்த முடியும்! ஆனால் வீழ்த்துவதற்குப் போதிய வலிவும் -- அழிப்பதற்குப் போதிய உரிமையும் இல்லாத சிலர் 'கழக அரசை வீழ்த்த வேண்டும்' என்பதற்காகப் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள்! 'விவசாயப் போராட்டம்' என்ற ஒன்றை நிகழ்த்தி -- தாறுமாறுகப் பிரச்சாரம் செய்து - பல இடங்களில் டஸ்ஸை எரித்து -- துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்ற அளவுக்கு நிலைமையை வளர்த்தார்கள்.

அந்தப் போராட்டத்திற்குப் பிறகு 14 இடங்களில் நடைபெற்ற நகராட்சி இடைத் தேர்தல்களில், 8 இடங்களைத் தி. மு. கழகம் பெற்றது; 2 இடங்களை முஸ்லிம் லீக் பெற்றது; ஓர் இடத்தை சுயேச்சை பெற்றார்; மூன்று இடங்களை சிண்டிகேட் காங்கிரசு பெற்றது; இதிலிருந்து கழகத்தின் செல்வாக்குக் குறையவில்லை என்பது ஒப்புதலாகிறது"

என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை மாநாட்டில் பேசுகையில் கூறினார்; அவர் பேசியதாவது:—

"சிறு சிறு சிற்றாறுகள் ஒன்றாகி -- நதியாகி உருவெடுத்த, பின்னர் அகண்ட காவிரியாகி -- வாய்க்கால் வழியாகப் பிரிந்து சென்று பயிருக்கு நல்ல பயன் விளைவிப்பதுபோல், பல்வேறு ஊர்களிலிருந்து நீங்கள் இங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றீர்கள்; சொற்பொழிவாளர்கள் தரும் கருத்து விளக்கங்களைப் பெற்றுப் பிரிந்து ஊருக்குச் சென்று -- இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை அந்தந்த ஊர்களில் பரப்பவேண்டியது உங்கள் கடமையாகும்.

வீரனுக்கு எப்படி எதிரியை வீழ்த்துவதற்கு வாள் தேவையோ -- எதிரியின் வாள் வீச்சை முறியடிக்க எப்படிக் கேடயம் தேவையோ -- அதுபோல், நமது கருத்தை எடுத்துச் சொல்கின்ற திறனும் -- நம்மைப் பற்றித் தாறுமாறுகப் பேசுகின்ற எதிரிகளின் பேச்சைத் தடுக்கின்ற திறனும் நமக்குத் தேவை.

கழக அரசை வீழ்த்தி விடுவதாகச் சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள்; டஸ் ஸ்டாண்டுக்குப் பஸ் ஸ்டாண்டு -- டீ கடைக்கு டீக்கடை -- வெற்றிலைப் பாக்குக் கடைக்கு வெற்றிலைப் பாக்குக் கடை -- நமது கருத்து முழக்கங்களைச் சொல்லி வளர்த்த இயக்கம் தி. மு. கழகம்.

இங்கே இலட்சோப லட்சமாகக் கூடியிருப்பவர்கள் கொள்கைக்காக வந்தவர்களே தவிர, பதவிக்காக வரவில்லை! அற்ற குளத்தின் அருநீர்ப் பறவைகள் அல்லர் அன்னார்! அக்குளத்திலேயே வாழ்ந்து மடியும் கொட்டியும் ஆம்பலும் போன்றவர்கள் தான் அவர்கள்!

பதவியே இல்லாத காலத்தில், எல்லா அதிகாரமும் படைத்த காமராசர் முன்னிலையில் முளை விட்டோம் நாம்! அந்த முளை செடியாகி -- மரமாகிவிட்டது!

தேர்தல் பாடம் நமக்குச் சொல்வது என்ன? -- தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளில், 138 தொகுதிகள் கிராமம் மட்டுமே உள்ள தொகுதிகளாகும்; நகர்ப்புறங்கள் இல்லாத தொகுதிகள் 138 ஆகும்; இதில் கழகம் 126 தொகுதிகளைக் கைப்பற்றியது; தோழமைக் கட்சியினர் 12 இடங்களைக் கைப்பற்றினர்; இதிலிருந்து, கிராமப் பகுதிகளில் உள்ள கழகத்தின் செல்வாக்கை உணரலாம்.

மாநில சுயாட்சி என்பது, 'மாநில மக்களுக்கு அதிக நன்மைகள் செய்ய அதிக அதிகாரங்கள் வேண்டும்' என்பதுதான்; அதற்காகவே மாநில சுயாட்சி கேட்கிறோம்.

அந்தக் கொள்கையை அண்ணா அவர்கள் வகுத்துத் தந்தார்; அதன் வழிநின்று கலைஞர் அவர்கள் அந்த இலட்சிய முழக்கத்தை எழுப்பி வருகிறார்!

ஒரு வலிவான நாட்டிற்கு 'யூனிட்டரி' அரசாங்கம் வேண்டும் என்ற கொள்கை, உலக வரலாற்றில் தவிடுபொடியாகிவிட்ட கொள்கை -- பொய்த்துப் போன கொள்கையாகும்.

மாநில அரசுகள் நிம்மதியாக இருக்க -- வேகமான பணி செய்ய மாநில சுயாட்சி தேவையாகும்.

மாநில -- மத்திய அரசுகளில் சச்சரவுகள் இருந்தால் அது பலவீனமான நாடு; சில ஆயிரம் பேர்களே உள்ள வாடிகனும் ஒரு நாடுதான்; அண்டோராவும் ஒரு நாடுதான்; 60 கோடி மக்கள் உள்ள சீனாவும் ஒரு நாடுதான்; 23 கோடி மக்கள் உள்ள அமெரிக்காவும் ஒரு நாடுதான்!

ஆனால், உலக நாடுகளில் வல்லரசுகள் அமெரிக்காவும் -- இரஷ்யாவும்தான்; அந்த இரு நாடுகளும் கூட்டாட்சி உள்ள நாடுகள்தான்; இரஷ்யாவில் பிரிந்து போகும் உரிமைகூட மாநிலங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள 5 மாநிலங்கள்தான் மத்திய அரசுகளுக்கு அதிகாரங்களைத் தந்திருக்கின்றனவே தவிர, மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிகாரம் தரவில்லை; அங்கே எந்த ஒரு மாநிலத்திற்கும் இரண்டு பிரதிநிதிகள்தான்!

இந்த உலக வல்லரசு நாடுகள் தரும் பாடத்தை மனத்தில் வைத்து, கழக அரசும் -- கழகமும் செய்யவிருக்கும் பணிகளுக்கு நல்ல ஆதரவு தரவேண்டுகிறேன்."

# விலைக் குறியீட்டு எண் 236 ஆக உயர்ந்துவிட்டது

## வாங்கும் சக்தி ஆண்டுக்கு ஆண்டு குறைந்தது பற்றிய புள்ளிவிவரம்

### மக்களவையில் நிதியமைச்சர் சவாண் தந்த விளக்கம்

புதுடில்லி ஆக. 5—

"இந்திய ரூபாயின் வாங்கும் சக்தி இந்த ஆண்டில் -- 1949-ல் இருந்ததில் 42.4 சதவிகிதமாகும்; 1949-ல் அனைத்திந்திய பயன்படுத்துவோர் விலை குறியீட்டு எண் 101 ஆக இருந்தது; அது, 1972-ம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் 236 ஆக உயர்ந்துவிட்டது"

என்று மக்களவையில், நிதியமைச்சர் ஒய். பி. சவாண் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கியதாவது:—

"1949-ல் 100 என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டால், இப்போதைய மதிப்பு 42.4 சதவிகிதமாகும்; அப்போதிருந்த மதிப்பிலிருந்து இவ்வாண்டில் முதல் ஆறு மாதத்தில் 57.6 சதவிகிதம் குறைந்துவிட்டது.

கடந்த 25 ஆண்டுக் காலத்தில் நாணயத்தின் வாங்கும் சக்தி பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் குறைந்துவிட்டது.

1948-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கீழ்க்கண்ட சில நாடுகளில், 1971-ல் நிலவிய வாங்கும் சக்தி சதவிகிதம் வருமாறு:—

ஜெர்மனி 64.6 சதவிகிதம்; சுவிட்சர்லாந்து 60 சதவிகிதம்; அமெரிக்கா 59.1 சதவிகிதம்; கனடா 56.2 சதவிகிதம்; தாய்லாந்து 50.4 சதவிகிதம்; இந்தியா 41.4 சதவிகிதம்; சுவீடன் 39.3 சதவிகிதம்; பிரிட்டன் 39.2 சதவிகிதம்; பிரான்சு 28.3 சதவிகிதம்; யுகோஸ்லாவியா 23.4 சதவிகிதம்.

### 25 ஆண்டு ஒப்பீடு

1950-ஆம் ஆண்டுமுதல் நாளது வரையில் பயன்படுத்துவோர் விலைக் குறியீட்டு எண்ணுக்கும்—ரூபாயின் வாங்கும் சக்திக்கும் உள்ள விகிதாசாரம் வருமாறு:—

| ஆண்டு | குறியீட்டு எண் | வாங்கும் சக்தி |
|---|---|---|
| 1950 | 101 | 99.1 |
| 1956 | 105 | 95.2 |
| 1962 | 130 | 76.9 |
| 1963 | 134 | 74.6 |
| 1967 | 209 | 47.8 |
| 1968 | 215 | 46.5 |
| 1969 | 213 | 46.9 |
| 1970 | 224 | 44.6 |
| 1971 | 230 | 43.5 |
| (முதல் 6 மாத சராசரி) | 236 | 42.4 |

# ரூ. 1,61,22,000 -- இந்தியாவுக்குப் பாகிஸ்தான் தர வேண்டுமாம்

புதுடில்லி, ஆக. 7—

"அஞ்சல் போக்குவரத்துக்காக ரூ. 1,61,22,000-மும், போக்குவரத்துக்காக ரூ. 66,55,000-மும் பாகிஸ்தான் அரசு இந்திய அரசுக்குப் பாக்கி தரவேண்டியிருக்கிறது"

என்று, வெளிவிவகாரத்துறைத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் மக்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

# 1,600 பேருக்கு கருச் சிதைவு

## அறுவைச் சிகிச்சை

புதுடில்லி, ஆக. 7—

நாட்டில் கருச் சிதைவு சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதிலிருந்து இவ்வாண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில்) மொத்தம் 1,594 கருச் சிதைவு அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த மூன்று மாதங்களில் டில்லியில் மட்டும் 388 கருச்சிதைவு அறுவைச் சிகிச்சைகள் நடந்தன.

அரியானா, கேரளம், பஞ்சாப், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் ஒருவருக்கு கூடக் கருச்சிதைவு அறுவைச் சிகிச்சை செய்யப்படவில்லை.

# கோவைக்கனவானின் அற்ப ஆசை -- கழக அரசுக்கு எதிராகத் துவேஷப் பிரசாரம் -- இட்டுக்கட்டிப்பேசி மக்கள் ஏளனத்திற்கு ஆளாக வேண்டாம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவால் மத்திய அரசில் இடம் பெற்றுவிட்ட கோவைக் கனவான் சி. சுப்பிரமணியமும், மாஜி ஜமீன்தார் கம்யூனிஸ்டு குமாரமங்கலமும் குறைந்தது மாதம் ஒரு முறையாவது தமிழ்நாட்டிற்கு வந்து கழக அரசை ஆசை தீரத் திட்டித் தீர்க்காவிட்டால், அவர்களுக்குத் தூக்கம் வருவதில்லையாம்!

மந்திரிப் பதவி தந்த இந்திரா காந்திக்கு 'விசுவாசமாக' நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தத் திருப்பணியில் ஈடுபட்டுள்ள அந்த இருவரும், 'முறை' வைத்துக்கொண்டு ஒருவர் மாறி ஒருவர் தமிழ்நாட்டுக்கு 'விஜயம்' செய்துகொண்டிருக்கின்றனர்.

உள்ளபடியே, இந்திரா காந்தி இந்தப் பணியைத்தான் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறாரா என்பது வேறு விஷயம்; இந்திரா காந்தி எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்காவிட்டாலும், டில்லியிலுள்ள இந்திரா காங்கிரசாருக்குத் தங்கள்மீது நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகவேனும் அவர்கள் இருவரும், இத்தகைய காரியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசுக்கு எதிர்காலமே இல்லை என்பதும் -- இந்தக் கட்சி தமிழ் மண்ணில் வளர வாய்ப்பே இல்லை என்பதும் இந்திரா காந்தி உட்பட அனைவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே, அந்தக் கட்சியைத் தமிழ்நாட்டில் வளர்க்கத் தாங்கள் இருவரும் பாடுபட்டு வருவதாகக் காட்டிக்கொள்ளவே இந்தப் 'பெரிய மனிதர்'கள் முனைந்துள்ளனர்!

இந்த இரண்டு பேரின் 'யோக்கியதை' பற்றியும் இந்திரா காந்திக்கு நன்கு தெரியும்; தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய 'பூர்வோத்திரம்' நன்றாகத் தெரியும்; இவர்களை அனுப்பித் தமிழ்நாட்டில் தமது கட்சியை வளர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையும் இந்திரா காந்திக்கு இல்லை! இந்த 'மகானுபாவர்'களின் பேச்சைக் கேட்டு இந்திரா கட்சியை ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழ் மக்களும் இல்லை!

தமிழ் மக்கள் மீதும் -- தமிழ்நாட்டின் மீதும் சுப்பிரமணியங்களுக்கும், குமாரமங்கலங்களுக்குப் உள்ள 'அக்கறை'யைவிட மற்றவர்களுக்கு அதிகம் உண்டு என்பதையும் தமிழ் மக்கள் அறிவார்கள்!

இந்திரா காந்தியைத் திருப்திப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு, இந்திரா காந்திக்கே உடன்பாடில்லாத விவசாயிகள் மின்சாரக் கட்டண எதிர்ப்புப் போராட்டத்தை இங்கு தூண்டிவிட்டுப் பிறகு இந்திரா காந்தியிடம் குட்டுப்பட்டதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

அண்மையில் தமிழ்நாட்டுக்கு வந்த மோகன் குமாரமங்கலம், 'நீதி விசாரணை' பற்றிக் கருத்தறிவித்தது எவ்வளவு விஷமத்தனமானது என்பதை இந்திரா காந்திக்கு, நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள் தந்தி மூலம் தெரிவித்திருந்தார். குமாரமங்கலம் டில்லி சென்றவுடன், இந்திராவிடம் நன்றாக 'வாங்கிக் கட்டிக்கொண்டார்' என்று அறிகிறோம்.

சுப்பிரமணியமும் தனது 'உளறுவாய்'க்கு அவ்வப்போது வாங்கிக் கட்டிக்கொள்வதாகக் கேள்விப்படுகிறோம்.

சுப்பிரமணியமும் -- குமாரமங்கலமும் இப்படி அடிக்கடித் தமிழ்நாட்டுக்கு வந்து போகவேண்டும் என்பதுதான் நமது ஆசையும்கூட! அவர்களுடைய கட்சிக்குத் தமிழ்நாட்டில் கொஞ்சநஞ்சம் இருக்கின்ற செல்வாக்கும் இந்த 'இரட்டையர்'களின் விஜயத்தால் அடியோடு அத்துப்படியாகிவிடுமல்லவா?

அண்மையில் தமிழ்நாட்டுக்கு வந்த திருவாளர் சுப்பிரமணியனார், தி. மு. கழகத்தையும் -- தி. மு. கழக அரசையும், தமக்கேயுரிய பாணியில் விளாசித் தள்ளியிருக்கிறார்! அதுவும் எங்கே போய் இப்படிப் பேசியிருக்கிறார் தெரியுமா? இராசபாளையத்திலோ, திருவில்லிபுத்தூரிலோ அல்ல -- 'அசல்' கிருஷ்ணகிரி தொகுதியிலேயே சென்று பேசியிருக்கிறார்!

கிருஷ்ணகிரி மக்களுக்குத் தெரியாதா -- இவருடைய யோக்கியதை! யார் தயவால் இவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார் -- நாடாளுமன்ற உறுப்பினர் ஆவதற்காக தி. மு. கழகத்தையும் -- தி. மு. கழகத் தலைவர் கலைஞரையும் அவர் எப்படியெல்லாம் புகழ்ந்தார் என்பதெல்லாம், மற்றவர்களைவிட கிருஷ்ணகிரித் தொகுதி மக்களுக்குத் தானே நன்றாகத் தெரியும்!

அங்கே போய் நின்றுகொண்டு, 'தி. மு. கழகம், தனது பாசிஸ்டுக் கொள்கையைக் கைவிட வேண்டும்' என்று கூறியிருக்கிறார்!

'பாசிஸ்டு'க் கொள்கை என்றால் என்ன என்பதே இந்தப் புண்ணியவானுக்குத் தெரியாதுபோலும் -- என்றுதானே அந்த மக்கள் கருதிக் கொள்வார்கள்?

வாக்களித்து, நாடாளுமன்றத்துக்குத் தன்னை அனுப்பிவைக்க நேர்ந்ததாலேயே, அத்தொகுதியில் உள்ள மக்கள் அனைவரும் தன் பக்கமே இருக்கிறார்கள் என்ற நினைப்பில், சுப்பிரமணியம் இப்படிப் பேசியிருக்கிறார்! கிருஷ்ணகிரித் தொகுதியே தி. மு. கழகத்தின் தொகுதி என்பதும் -- 1971 தேர்தலில் தி.மு.க. இட்ட பிச்சையால் அங்கு இந்திரா காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெற்றார் என்பதும் -- அதன் பிறகு அந்த வேட்பாளர் விட்டுக்கொடுத்ததால் சி. சுப்பிரமணியம் தி.மு.க. தயவுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பதும் -- தமிழ் மக்கள் அனைவரும் அறிந்த உண்மை! ஆனால், சுப்பிரமணியத்துக்கு அந்த நினைவு வரவில்லை!

இருபதாண்டுக்காலக் காங்கிரசுப் பாசிஸ்டு ஆட்சியில் பட்ட துன்பத்திற்குப் பரிகாரமாகத்தான், மக்கள், தி. மு. கழகத்துக்குத் தங்கள் பேராதரவை அளித்து -- 1967-ல், ஆட்சியை அதனிடம் ஒப்படைத்தார்கள்; 1971 லும் மீண்டும் ஒப்படைத்திருக்கிறார்கள்; இனியும் தி. மு. கழக ஆட்சிதான் தமிழகத்தில் தொடரும்; சிண்டிகேட்டோ, இண்டிகேட்டோ, 'மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம்' என்று கனவிலும் கருத முடியாது!

தி. மு. க. ஆட்சியை 'பாசிஸ்டு ஆட்சி' என்று சொல்வதாலேயே தி. மு. கழகத்தைக் கைவிட்டுவிட்டு, இந்திரா கட்சியை ஆட்சியில் அமர்த்திவிடப் போவதில்லை தமிழ்நாட்டு மக்கள்! இப்படிப் பேசுவதன் மூலம் இருப்பதையும் இந்திரா கட்சி இழப்பதற்குத்தான் சி. சுப்பிரமணியம் வழிவகுக்கிறார்!

மத்திய அரசைத் தூற்றுவதையே தி. மு. கழகம் தனது வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறதாம்! இந்த வழக்கத்தைக் கைவிட்டுவிட்டு, இந்தியாவின் மற்ற மாநிலங்களைப் போலத் தமிழ்நாடும் முன்னேறுவதற்கான வழிவகைகளைச் செய்யுமாறு திருவாளர் சுப்பிரமணியம் தி. மு. கழக அரசுக்கு, 'புத்தி' சொல்லப் புறப்பட்டிருக்கிறார்!

தி. மு. கழக அரசு மத்திய அரசைத் தூற்றுகிறதா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும்; தமிழ்நாடு முன்னேறுவதில் மற்ற எந்த மாநிலத்தைவிடப் பின்னடைந்திருக்கிறது? தி. மு. கழக ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம், இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சியிலும் கிடையாது என்பது இந்த மாநிலத்து மக்களுக்கு நன்றாகப் புரியும். இப்படிச் சொல்வதன் மூலம் தமிழகத்தில் கழக ஆட்சி புரிந்துள்ள அரும்பெரும் சாதனைகளையெல்லாம் மறைத்துவிட முடியும் என்று திரு. சுப்பிரமணியம் நம்புவாரானால் அவர் நிலைகண்டு இரங்குவது தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை!

மத்திய அரசை எதிர்த்து தி. மு. க. துவேஷப் பிரசாரம் செய்வதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்; மத்திய அரசை மட்டுமல்ல -- வேறு யாரைப் பற்றியும் துவேஷப் பிரசாரம் செய்வதோ -- ஏசுவதோ -- தூற்றுவதோ தி. மு. கழகத்துக்கு எப்போதுமே உடன்பாடானதன்று; அப்படிப்பட்டது அல்ல -- பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த அரசியல் அறநெறி!

தங்களுக்குப் பிடிக்காதவர்களைத் தூற்றுவதும் -- துவேஷ வித்தை தூவுவதும் காங்கிரசுக்காரர்களுக்கே கைவந்த கலையாகும்; கழகத்தின்மீது ஏதாவது ஒரு பழியைச் சுமத்திச் சுமத்தியே துவேஷப் பிரசாரம் செய்து பழகிப் போனவர்கள் காங்கிரசார்தான்!

கழக அரசுக்கு விரோதமான காரியத்தில் மத்திய அரசு ஈடுபடுமானால் அதனைக் கண்டிக்கின்ற உரிமை கழகத்திற்கு இல்லையா? அப்படிக் கண்டிப்பதுதான் துவேஷம் என்றால், சி. சுப்பிரமணியமும் அவருடைய கட்சியினரும் தான் 'பாசிஸ்டு'கள்!

"சனநாயக ஆட்சியில் கருத்தை வெளியிடவும் -- தவறுகளைக் கண்டிக்கவும் அனைவருக்கும் உரிமையுண்டு!" என்று அதே கூட்டத்தில் சுப்பிரமணியமே பேசியிருக்கிறார்; அந்த சனநாயக உரிமை தமிழ்நாட்டில் உள்ள இந்திரா கட்சிக்கு மட்டும்தான் சொந்தமா? கழகத்திற்கு இல்லையா? இந்திரா காங்கிரசு ஆளும் மற்ற மாநிலங்களுக்கு இல்லையா?

இட்டுக்கட்டியும் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லியும், தி. மு. க.-மீது மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கிவிடலாம் என்று சுப்பிரமணியங்களும் -- குமாரமங்கலங்களும் எண்ணுவது அற்ப ஆசையின் விளைவேயாகும்.

சனநாயகத்தின் பால பாடமே புரியாத இந்தப் 'பெரிய மனிதர்'கள், 'பாசிஸ்டு'கள் என்று கழகத்தவர்மீது பழி சுமத்துவது, தமிழ்நாட்டு மக்கள் எள்ளி நகையாடத்தான் பயன்படுமே தவிர, கழகத்தின்மீது யாருக்கும் வெறுப்பு ஏற்படச் செய்யாது!

எனவே, கூத்திலே கோமாளி வருவதுபோல் அடிக்கடி தமிழகத்துக்கு விஜயம் செய்து இப்படிப்பட்ட 'நகைச்சுவை'க் கருத்துக்களை அள்ளி வீசிக்கொண்டே இருக்கும்படி சுப்பிரமணியத்தையும் குமாரமங்கலத்தையும் கேட்டுக்கொள்வோமாக!

—மா. சே.

# மக்கள் சக்தி கழகத்தின் பக்கமே!

## இதனை உணராதவர்கள் ஏதேதோ பேசுகிறார்கள்

### 'கழக அரசைக் கவிழ்த்துவிட்டால் அடுத்தது என்ன?' -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கேள்வி

மதுரை, ஆக. 8—

"தி. மு. கழக அமைச்சரவை, தமிழக மக்களின் ஏகப் பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்பாக விளங்கிக்கொண்டிருக்கிறது; இங்கு பேசிய நண்பர்கள் சிலர், மத்தியப் பேரரசு இந்த அரசைக் கலைத்துவிடுவதாகக் கூறப்படும் பிரசாரம் பற்றிப் பேசினார்கள்; கழக அரசைக் கலைக்கும் -- கலைக்கும் என்று, யார் -- யாரைப் பார்த்துச் சொல்வது? இங்கே கூடியிருக்கின்ற இலட்சோபலட்சம் மக்களைக் கலைக்கக்கூடிய -- அவர்களது மனத்தைக் கலைக்கக்கூடிய ஆற்றல் யாருக்காவது இருக்குமானால், அவர்கள் வேண்டுமானால் கலைக்கலாம்.

"இந்த மக்கள் சக்தி எங்கள் பக்கம் இருக்கும் வரையில் யாராலும் இந்த அரசைக் கலைக்க முடியாது! அதுவரை யாருக்கும் அப்படிப்பட்ட துணிவு வராது!

"அப்படியே கலைத்துவிட்டாலும் என்ன நடக்கும் -- தேர்தல் நடக்கும்; மக்களைச் சந்திப்போம் -- அவர்கள் தீர்ப்பு அளிப்பார்கள்; நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோமே தவிர இந்திரா காங்கிரசால் அமைச்சரவை அமைக்க முடியாது!"

என்று, கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், மதுரை மாநாட்டில் பேசுகையில் கூறினார்; அவர் பேசியதாவது:—

#### நியாயம் காப்பாற்றப்பட கடமையைச் செய்கின்றனர்

"தமிழ்நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்; இங்கே இருக்கின்ற ஐந்தாம் படையினர் ஏதாவது செய்தால் அவர்கள் மக்களாலேயே தண்டிக்கப்படுவார்கள்!

'போலீசு ஏன் சுட்டது -- சுட்டது சரியா -- என்று கேட்கிறார்கள்; போலீசார், மக்களை வன்முறையாளர்களிடமிருந்து காப்பாற்றவும் -- தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் சுடவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

போலீசாருக்கும் -- அரசியல் கட்சிக்கும் தொடர்பு இல்லை; அவர்கள் ஆண்டாண்டுக் காலமாக பொதுமக்கள் உடைமைக்கும் -- உயிருக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறார்கள்; அதற்கு ஊறு விளைவிக்கச் சமூக விரோதிகள் வன்முறையில் ஈடுபடும்போது அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள்!

இப்போது அவர்கள் எங்கள் பொறுப்பில் இருக்கிறார்கள்; காங்கிரசு ஆட்சிக் காலத்தில் அவர்கள் பக்கம் இருந்தார்கள்!

நீதித்தன்மை படைத்த தனிப் பிரிவாகத்தான் காவல்துறை இருந்துவருகிறது; ஆட்சியினுடைய திட்டத்தை ஏற்று -- மக்களைக் காப்பாற்றும் பொறுப்பில் இருக்கிறார்கள்; தவறு செய்தவர்களைத் தண்டிக்கிறார்கள்;

சில இடங்களில் அராஜகம் நடக்கிறதென்றால் அதை அடக்கும் பொறுப்பு போலீசாருடையது; போரில் எதிர்த்தரப்பு இராணுவத்தின்மீது நமது இராணுவம் சுடுகிறது -- இது எல்லையைக் காக்கும் போர்!

இங்கே நடப்பது மக்களைக் காக்கும் போர் -- நியாயத்தைக் காக்கும் போர்!

#### நம்பிக்கைக்கோ -- நட்புக்கோ உரியவர்களல்லர்!

கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களே -- அவர்கள், நாட்டில் கலவரம் நடந்தால் முன்னுக்கு வருவதில்லை; பின்னாலிருந்துகொண்டு கலவரத்தைத் தூண்டிவிட்டு விஷமங்களைச் செய்வார்கள்; அவர்களது விஷமத்தனத்திற்கு அப்பாவி மக்கள் இரையாவார்கள்!

நமது கவனம் திசை திரும்பினால், அவர்கள் நம்மீதும் பாய்ந்துவிடுவார்கள்; அப்படிப்பட்ட நாசகாலர்கள் அவர்கள்! அவர்கள் தமிழகத்தின் நம்பிக்கைக்கு உரியவர்களுமல்லர் -- நட்புக்கு உரியவர்களுமல்லர்!

#### கொள்கைத் தத்துவம்

நான் தோழர் கல்யாணசுந்தரம் அவர்களின் தொகுதிக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தேன்; அவர் என்னிடம், 'நீங்கள் வந்த பிறகுதான் இவ்வளவு பெரிய கூட்டம்' என்றார்; 'இது, எங்கள் கொள்கைக்காகக் கூடுகின்ற கூட்டம்' என்றேன்; 'அப்படியானால், எங்களுக்குக் கொள்கை இல்லையா' என்று கேட்டார்; 'எங்கள் கொள்கைக்கு ஆதரவாக இருப்பதால் உங்கள் கொள்கைக்கும் மதிப்பு ஏற்படுகிறது' என்று சொன்னேன். இன்றையத்தினம் இவ்வளவு பெரிய கூட்டம், அந்த அடிப்படையில்தான் கூடியிருக்கிறது.

#### மக்கள் தந்த தீர்ப்பை காமராசர் உணரட்டும்

'கோமாளி' என்று நமது கலைவாணர் அவர்களைக் கிண்டல் செய்த காமராசர் எப்படியாகியிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்; அவர் எத்தனை ஆண்டுக்காலம் தொண்டு செய்தவர் -- தியாகம் செய்தவர்? அப்படியிருந்தும், புதிதாக நாட்டுக்கு ஏதாவது சொல்கிறாரா -- புதிய திட்டங்களைச் சொல்கிறாரா என்றால், இல்லை.

'போராட்டம் ஏதாவது நடக்காதா -- அதில் யாராவது சாக மாட்டார்களா -- அதை வைத்துக்கொண்டு அரசியல் நடத்தலாமா என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்!

'ஆயிரம் பேர் என்னோடு சாவதற்குத் தயாராக இருந்தால் இந்த அரசைக் கவிழ்த்துக் காட்டுகிறேன்' என்கிறார்!

தங்களது மதிப்புமிக்க வாக்குகளை அளித்து அமைத்த இந்த அரசை, தமிழக மக்களின் விருப்பத்திற்கு மாறாகக் 'கவிழ்ப்போம்' என்கிறார்! அந்த அளவுக்குப் பதவி ஆசை, விட்ட குறை தொட்ட குறையாக இன்னும் அவருக்கு இருக்கிறது!

சுகத்தை அனுபவித்தவர்களுக்கு அதை இழக்க நேரிடும்போது வருத்தம் ஏற்படத்தான் செய்யும்!

கலைஞர் அவர்களைப் போலீசார் பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள்; அதே போலீசார்தான் இன்றைக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள் -- வணக்கம் செலுத்துகிறார்கள் என்றால், 'அது, மக்கள் தந்த கட்டளை — தீர்ப்பு' என்பதைக் காமராசர் உணரவேண்டும்!

#### இந்திரா மறக்கலாமா?

நாங்கள் இந்திராவை மதிக்கிறோம் -- அவரது தொண்டைப் போற்றுகிறோம்; ஆனால், எங்களுக்கும் தன்மானம் உண்டு -- தொண்டுள்ளம் உண்டு -- சுதந்தர தாகம் உண்டு என்பதையும், எங்களுக்குப் பக்கபலமாக தமிழக மக்கள் இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் மறந்துவிடக் கூடாது!

தாய்க் குலத்திற்கு -- பெண்களுக்கு உயரிய இடத்தையும் மதிப்பையும் தருவது தி. மு. கழகம்; தாயை வணங்கும் நான் உங்களை வணங்குகிறேன்; அதே சமயத்தில், 'ஒரு தாய், வீண் பழிக்கு ஆளாகக் கூடாது' என்று நாங்கள் விரும்புகிறோம்.

இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்பதற்கு உண்மையான காரணம் என்ன இருக்கிறது என்பதை, இங்கே பெரும் அளவில் கூடியிருக்கின்ற தாய்மார்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

#### நியாயத்திற்குப் புறம்பாக நடக்கமாட்டோம்

மனச்சாட்சிக்கு அடங்கி நடக்கிறோம் -- அறிஞர் அண்ணா வழி நடக்கிறோம்! அறிஞர் அண்ணா கற்றுத்தந்த பண்பாட்டு வழி நடக்கிறோம்! நியாயத்திற்குப் புறம்பாக நடக்க நாம் விரும்பவில்லை! அப்படித்தான் அண்ணா அவர்கள் நம்மை வளர்த்திருக்கிறார்!"

# போனசு சட்டத்தின்கீழ் ....

## பாதுகாப்பு -- ரயில்வே - அஞ்சலக ஊழியர்கள்

### மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 7—

"போனசு வழங்கும் சட்டத்தின் கீழ், பாதுகாப்பு -- இரயில்வே -- அஞ்சல் -- தந்தித் துறை, மற்ற மத்திய அரசு நிறுவனங்களின் தொழிலாளர்களைக் கொண்டு வரும் கோரிக்கையை அரசு புதிதாகப் பரிசீலிக்கும்"

என்று, மக்களவையில், தொழிலாளர் நல அமைச்சர் கடில்கார் உறுதி கூறினார்.

"ஆனால் அரசு முடிவு செய்யுமுன் பல அம்சங்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால் போனசுப் பரிசீலனைக் குழுவிடம் இந்தப் பிரச்சினை விடப்படும் என நான் உறுதி கூற இயலாது" என்றார் அவர்.

# ஏற்றுமதி வர்த்தகம்

## அரசு ஏற்கும் எனத் தகவல்

புதுடில்லி, ஆக. 7—

"இந்தியாவின் இறக்குமதிகளில் 96 சதவிகிதத்தை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அரசே மேற்கொண்டுவிடும்"

என்று அயல் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ். எஸ். மிச்ரா, நாடாளுமன்ற மேலவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஆனால், ஏற்றுமதி வர்த்தகத்தை அரசு மேற்கொள்ள விரும்பவில்லை என்பதை அவர் தெளிவாக்கினார்; 'தனியார் துறையாக இருந்தாலும் -- அரசு துறையாக இருந்தாலும் -- ஏற்றுமதி பெருக வேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும்' என்றார்.

# கழகத்திற்கு வந்த காங்கிரசார்

## மதுரை மாநாட்டில் அறிமுகம்

மதுரை, ஆக. 28—

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இந்திரா காங்கிரசு -- சிண்டிகேட் காங்கிரசு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த மூவர் அக்கட்சிகளிலிருந்து விலகி மதுரை மாநாட்டு மேடையில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தனர்; அவர்கள் பெயர் வருமாறு:—

ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவரும் -- இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவருமான வேலுச்சாமி.

கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரும் -- இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவருமான மாரிசாமி.

சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்த பழக்கடை பாண்டி.

இவர்கள் மூவரும் தாங்கள் சார்ந்திருந்த கட்சிகளை விட்டு விலகிக் கழகத்தில் சேர்ந்தனர்.

மதுரை மேயர் முத்து அவர்களை மாநாட்டு மேடையில் அறிமுகப்படுத்தினார்.

கழகத் தலைவர் கலைஞர், கழகத்தில் சேர்ந்த புதியவர்களுக்கு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

# பட்டீசுவரம் வட்டார எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம்

பட்டீசுவரம் வட்டார எம்.ஜி. ஆர். ரசிகர் மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் 31—7—71-ல், திரு. எல். டி. கிட்டப்பா இல்லத்தில் நடைபெற்றது; அதுபோது, அகில இந்திய சிறந்த நடிகருக்கான 'பாரத்' விருது பெற்ற எம்.ஜி ஆர். அவர்கட்கு வெள்ளியினால் செய்த உலகம் சுற்றும் வாலிபனுடைய உருவம் பொறித்த உலக உருண்டை பரிசளித்துப் பாராட்டு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்துக்கும் ஒரு தொழில்பேட்டை

## சிறு தொழில்கள் நடத்த ரூ. 25,000 வரை கடன் உதவி

### தமிழக அரசின் திட்டம் -- தொழில்துறை இயக்குநர் தகவல்

சென்னை, ஆக. 6—
சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் ரூ. 25,000 வரை கடன் தரும்; மாவட்ட மட்டத்தில் இந்தக் கடன் தரப்படும்.

தொழில் -- வர்த்தகத் துறை இயக்குநர் எச். பி. என். ஷெட்டி, இத்தகவலைத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இதுவரையில் மேல்வரம்பு ரூ. 7,500 ஆக இருந்தது; இப்போது இது ரூ. 25,000 ஆக உயர்த்தப்படுகிறது.

அரசாங்க உதவிச் சட்டத்தின் கீழ் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக இந்தக் கடன்கள் அளிக்கப்படும்; மாவட்ட மட்டத்தில் கலெக்டர் தலைமையில் அமைக்கப்படும்; ஒரு குழு கடன் விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்யும்.

சிறு தொழில்களுக்குப் பதிவுச் சான்றுகள் (ரிஜிஸ்திரேஷன் சர்டிபிகேட்டுகள்) வழங்கும் விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன; திருத்தப்பட்ட விதிகளின்படி தற்காலிகச் சான்றுகளை ஒரே நாளைக்குள் தொழில் இயக்குநர்கள் வழங்குவார்கள்; நிரந்தரச் சான்றுகள் வழங்க 30 நாட்களுக்குமேல் ஆகாது.

நான்காம் திட்டக் காலத்தில் கிராமக் கைத்தொழில் திட்டத்தை செயல்படுத்த திருநெல்வேலி, செங்கற்பட்டு, சேலம் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன; 5-வது திட்ட காலத்துக்கு இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் நாமக்கல், தர்மபுரி, திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் புதிய தொழில்பேட்டைகள் தொடங்கப்படும்; ஏற்கனவே உள்ள தொழில்பேட்டைகளில் 96 புது யூனிட்டுகள் தொடங்கப்படும்.

ஒவ்வொரு வருவாய் வட்டாரத்துக்கும் குறைந்தது ஒரு தொழில் பேட்டையாவது இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்."

## விவசாயத் தொழிலாளருக்கு ஊதியக் குழு

### மத்திய அமைச்சர் கைவிரிப்பு

புதுடில்லி, ஆக. 8—
"விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனி ஊதியக் குழு அமைப்பது பற்றி மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை"

என்று, தொழிலாளர் துறை அமைச்சர் பால கோவிந்த வர்மா நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

"விவசாயத் தொழிலாளர்கள் நாடெங்கும் சிதறிக் கிடக்கிறார்கள்; ஆகவே, விவசாயத் தொழிலாளர்களையும் உள்ளடக்கி தொழிலாளர் அமைப்பை விரிவுபடுத்த அவசியம் இல்லை" என்றும் அமைச்சர் சொன்னார்.

## ஒலிபெருக்கி பற்றிய அரசு ஆணை

### இரண்டுஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 8—
ஒலிபெருக்கிகள் -- மைக்குகள் வைக்கும் பணிகளை மின்சார வாரியத்திடம் கண்டிராக்டர் லைசென்சு பெற்றவர்கள் மட்டுமே ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், ஒலிபெருக்கி செட்டுகளை ஒயர்மென் சர்டிபிகேட் உள்ளவர்கள்தான் இயக்க வேண்டுமென்றும் கூறும் 6—12—71 தேதியிட்ட தமிழ்நாடு அரசு ஆணை நடைமுறையை இரண்டாண்டுகளுக்கு நிறுத்தி வைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஆணை செயல்படுவதனால் பல ஆண்டுகளாக இத்துறையில் ஈடுபட்ட பெரும்பாலோர் வேலையிழக்க நேரிடுமென்பதைக் கருதி இது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் டெலிவிஷன் தொழிற்சாலை

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷனுக்கு அனுமதி

சென்னை, ஆக. 6—
டெலிவிஷன் செட்டுகளை உற்பத்தி செய்வதற்காகச் சென்னைக்கு அருகில் கூட்டுத் துறையில் ஒரு தொழிற்சாலை ஏற்படும்.

மத்திய அரசிடமிருந்து இத்தொழிற்சாலையை அமைப்பதற்காகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷனுக்கு முன்னோட்ட அனுமதிக் கடிதம் கிடைத்துள்ளது.

இத்தொழிற்சாலையை அமைப்பது பற்றித் தனியார் துறை நிறுவனம் ஒன்றுடன் இந்தக் கார்ப்பரேஷன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறது.

இத்திட்டம் முற்றிலும் உள்நாட்டுத் தொழில் நுட்பத்தைக் கொண்டு அமைக்கப்படும்.

ஆண்டு ஒன்றுக்கு 20 000 செட்டுகளை இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்யக்கூடும்.

இந்த நிறுவனத்தில் தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கார்ப்பரேஷன் முதலீடு செய்யும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷனால் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்துறை நிறுவனம் தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்டஸ் லிமிடெட்—சோடியம் ஹைட்ரோசல்பேட் தொழிற்சாலையைத் தொடங்குவதற்காக ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது; இதற்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 3 கோடி செலவில் இத்தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுத் துறையில் மோட்டார் டயர் -- டியூப் உற்பத்திக்காக அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனரல் டயர் கம்பெனிக்கும் -- தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்டுக்கும் (தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்திய நிறுவனம்) ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

## பொறியியல் பட்டதாரிகளுக்குத் தொழில் நடத்த உதவி

சென்னை, ஆக. 6—
தமிழ்நாட்டில் பொறியியல் பட்டதாரிகள் சொந்தமாகத் தொழில் தொடங்கி நடத்தப் புதிய திட்டம் துவக்கப்பட்டுள்ளது; இதற்காக மத்திய அரசு ரூ. 35 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, 200 பொறியியல் பட்டதாரிகள் பயனடைவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகளுக்கு முதலில் தொழிற்சாலைகளில் ஒரு ஆண்டு பயிற்சி அளிக்கப்படும்; பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 250 உதவித் தொகை வழங்கப்படும்.

பயிற்சி முடிந்தவுடன் சொந்தமாக சிறிய தொழில்கள் தொடங்க நிதி உதவி செய்யப்படும்."

## 'முகத்திரண்டு .....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தறிவில்லாதவர்களின் தொகை 8 கோடி 80 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கமே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

# தமிழ்நாடு சட்டமன்றக்கூட்டம்-- நாளை தொடங்குகிறது

## விவாதத்திற்கு வரும் மசோதாக்கள் விவரம்

சென்னை, ஆக. 8—
தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் நாளை (புதன்கிழமை) காலை 10-மணிக்குத் தொடங்குகிறது -- சுமார் 10-நாட்கள் வரை நடைபெறக்கூடும்.

முதல் நாளன்று கேள்வி நேரத்திற்குப் பிறகு நாடாளுமன்றம் நிறைவேற்றிய அரசியல் சட்ட 28 வது திருத்த மசோதாவுக்கான ஒப்புதல் வழங்கும் தீர்மானத்தை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வருவார்; அதன்மீது பின்னர் விவாதம் நடைபெறும்.

சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத்தில் சில மசோதாக்களும் கொண்டுவரப்படும்; வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்ட ஆயுள் நீடிப்பு -- விற்பனை வரிச் சட்டத் திருத்த மசோதா -- பண்ணையாள் பாதுகாப்பு நியாய வார மசோதாவை குமரி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துவது -- தனியார் பள்ளிகள் நிர்வாகக் கட்டுப்பாடு -- சென்னை மாநகராட்சிமன்ற சட்டத் திருத்தம் ஆகிய மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## சுதந்தர நாள் வெள்ளிவிழாக்கூட்டம்

### ஆக 14 நள்ளிரவு நடைபெறும் -- ஆளுநர் உரையாற்றுவார்

சுதந்தர நாள் வெள்ளி விழாவையொட்டி இம்மாதம் 14-ம நாள் நள்ளிரவில் சட்டமன்றம் கூடும்; அதுபோது, மேலவை உறுப்பினர்களும் -- சட்டப் பேரவை உறுப்பினர்களும் கூட்டாக இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்; இந்த நள்ளிரவு கூட்டத்தை ஆளுநர் துவக்கிவைக்க -- பேரவைத் தலைவர் -- மேலவைத் தலைவர் -- முதலமைச்சர் -- இரு அவைகளையும் சேர்ந்த கட்சித் தலைவர்கள் ஆகியோர் உரையாற்றுவர்.

# தென் மாநிலங்களின் மின்வாரியப் பணிகள் ஒருங்கிணைப்பு

## இந்தியாவிலேயே முதல் முறையாகும்

### மின்சார நெருக்கடிகளை நான்கு மாநிலங்களும் இணக்கமாகத் தீர்த்துக்கொள்ள இயலும்

சென்னை, ஆக. —7

**தமிழ்நாடு -- ஆந்திரம் -- மைசூர் -- கேரளம் ஆகிய தென் மாநிலங்களில மின்சார உற்பத்தி -- சப்ளை ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க, இந்த நான்கு மாநிலங்களின் மின்சார வாரியங்கள் முடிவு செய்துள்ளன; ஆக. 14ம் நாள் முதல் இது நடைமுறைக்கு வரும்.**

இந்நான்கு மாநிலங்களின் மின் வாரியங்களின் இணைப்பு அமைப்பான 'தென் மண்டல மின்சார வாரிய'த்தின் கூட்டம் ஐதராபாத்தில் நடந்தது.

இக்கூட்டத்திற்குத் தமிழக மின் வாரியத்தின் தலைவர் சி. ஜி. இரங்கபாஷ்யம் தலைமைதாங்கினர்; தென் மண்டல மின்வாரியத்தின் தலைவராகவும் அவர் பதவி வகிக்கிறார்.

நான்கு மாநிலங்களின் மின் வாரியங்களின் தலைவர்களும் -- தலைமைப் பொறியர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஒரு மண்டலத்திலுள்ள மின் வாரியங்களின் பணிகளை ஒருங்கிணைப்பது நமது நாட்டிலேயே இதுதான் முதன்முறையாகும். இந்த முறையின் மூலம், அந்த மண்டலத்திலுள்ள மாநிலங்கட்கு இடையே ஏற்படும் மின்சார நெருக்கடிகளை இணக்கமாகத் தீர்த்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக மைசூர் மாநிலத்தில் ஷராவதி நீர் மின் நிலையத்தினைச் சார்ந்த சுரங்கக் குழாய்களைச் செப்பனிடும் பணி இம்மாதம் பிற்பகுதியில் நடக்க இருக்கிறது; இதையொட்டி, ஷராவதி நீர் மின் நிலையத்தில மின்சார உற்பத்திச் செய்யும் 5 ஜெனரேட்டர்களும் நிறுத்தப்படும்; இதனால் ஏற்படும் மின்சார நெருக்கடியைப் பிற மாநிலங்களைச் சேர்ந்த மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு சமாளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன; தமிழ்நாட்டில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திப் பணிகளும் இதற்காக மிகவும் தீவிரப் படுத்தப்படுகின்றன.

## காண்டிராக்ட் முறையில் தொழிலாளர் நியமனம்

### 'அறவே ஒழிக்க இயலாது' என்கிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, ஆக. 7—
"தொழிலாளர்களைக் காண்டிராக்ட (ஒப்பந்தப் பணியாளர்) முறையில் வைத்துக் கொள்ளும் பழக்கத்தை நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் அறவே ஒழித்துவிட இயலாது"

என்று மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர். கே. கடில்கர், மக்களவையில், கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"காண்டிராக்ட் தொழிலாளர் நியமன முறையை ஒழுங்குபடுத்தவும் -- ரத்து செய்யவும் புதிதாக ஏற்பட்டுள்ள சட்டத்தின் கீழ் நாட்டில் காண்டிராக்ட் தொழிலாளர் முறை தற்போது தான் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது."

கேள்வி:—"நாட்டில் எவ்வளவு தொழிலாளர்கள் இங்ஙக காண்டிராக்ட் முறையின்கீழ் வருகிறார்கள்?"

அமைச்சர்:—"எண்ணிக்கைத் திரட்டப்பட்டு வருகிறது."

எஸ். எம். பானர்ஜி:—"மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் உள்ள இரயில்வே துறையிலும் இந்தக் காண்டிராக்ட் தொழிலாளர் நியமனத்தை ஒழுங்குபடுத்துகின்ற இப்புதிய சட்டப்படி நடக்க நிர்வாகத்தினர் மறுத்துவருவது தெரியுமா?"

அமைச்சர்:—"அது எந்தத் துறையானாலும், காண்டிராக்ட் முறையை அறவே ஒழிப்பதென்பது இப்போதைக்கு முடியாது; இப்புதிய சட்டத்தின் கீழ் காண்டிராக்ட் தொழிலாளர்களுக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கின்றனவா என்று கண்காணித்து வருகிறோம். இப்போதைக்கு இவ்வளவுதான் செய்ய முடியும்."

தொழிலாளர் நலத் துறை துணையமைச்சர் பாலகோவிந்த வர்மா தெரிவித்ததாவது:—

"காண்டிராக்ட் தொழிலாளர் நியமன முறையை ஒழுங்குபடுத்தக் கொண்டுவரப்பட்ட இப்புதிய சட்டத்தைச் செயலாக்குவதில் பல சங்கடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன; பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களில் இப்புதிய சட்டத்தை எதிர்த்து வழக்குகள் போடப்பட்டுள்ளன; மத்திய -- மாநில அரசுகள், சட்டத்துக்கு ஆதரவாக வழக்காடி வருகின்றன.

இன்னும் சில மாநில அரசுகள், இப்புதிய சட்டத்துக்கான நடைமுறை விதிகளை உருவாக்கி அறிவிக்கவில்லை."

## தேர்ச்சிபெருமலே 8,000 பேர் மருத்துவம் செய்கின்றனராம்

புதுடில்லி, ஆக. 7—
'போதிய தேர்ச்சி பெருமல், நவீன மருத்துவ முறையில் (அலோபதி) சிகிச்சை அளிப்பவர்களின் எண்ணிக்கை நமது நாட்டில் சுமார் 8,000 ஆக இருக்கலாமென்று மதிப்பிடப்படுகிறது"

என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டி. பி. சட்டோபாத்யாயா நாடாளுமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

"அரைகுறை வைத்தியர்களின் நடவடிக்கையைத் தடுக்கத் தற்போதுள்ள தண்டனை விதிகளே போதுமானவையாகும்"

என்றும் அவர் கூறினர்; மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"ஒரிசாவில் மட்டும் பதிவு செய்து கொள்ளாமலும் -- லைசென்சு பெருமலும் மருத்துவம் செய்பவர்கள் இருப்பதாகவும் தெரிகிறது.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், புள்ளிவிவரங்கள் திரட்டப்படவில்லை; அல்லது ஆய்வு நடத்தப்படவில்லை."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) [illegible] வெளியிடப்படுகிறது.